**வகுப்பு 4**

**தமிழ்**

**பாடம் 2: பனைமரச் சிறப்பு**

## அ) கூடுதல் வினாக்களுக்கு விடையளி

1. **பனைமரத்தில் இருந்து கிடைக்கும் உணவுப் பொருள்கள் யாவை?**

நுங்கு, பனங்கிழங்கு, பனம்பழம், பதநீர், கற்கண்டு, கருப்பட்டி

2. **சிறுவர்கள் விளையாடுவதற்குப் பனைமரம் எவ்வாறு உதவுகிறது?**

பனங்காய் வண்டி, பனை ஓலைக் காற்றாடி, பனை ஓலை விசிறி, பொம்மைகள்

3. **பனைமரத்தை நாம் எவ்வாறு பாதுகாக்கலாம்?**

“மரங்கள் இன்றி மனிதர்கள் இல்லை” இதனை உணர்ந்து நாம் அனைவரும் பனைமரம் வெட்டப்படுவதை தவிர்க்க வேண்டும். பனைமரத்தினைப் பற்றிய பல அரிய செய்திகளை அறிந்து கொண்டு, பனையினி சிறப்பினை நமது நண்பர்களுக்கும், மற்றவர்களுக்கும் எடுத்துக் கூற வேண்டும். பனங்கொட்டைகளை சேகரித்து ஆறு, குளம், குட்டை பேன்றவற்றின் கரையோரங்களில் விதைகளை ஊன்றி பாதுகாக்கலாம்.

4. **பனைமரத்தின் பயன்களாக நீ கருதுவனவற்றை உம் சொந்த நடையில் எழுதுக.**

பனைமரம் நீண்டு வளரக்கூடியது.

இது வேர், தூர்ப்பகுதி, நடுமரம், பத்தைமட்டை, உச்சிப்பகுதி, ஓலை, சில்லாட்டை, பாளைப்பீலி, பனங்காய், பச்சைமட்டை, சாரைஓலை, குருத்தோலை என்ற பன்னிரண்டு உறுப்புகளை உடைய மரம்.

இந்த உறுப்புகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பயனைத் தரக்கூடியது. அதனால் தான் பனைக்குக் ”கற்பகத்தரு” என்ற பெயரும் உண்டு.

நுங்கும், பனங்கிழங்கும் உணவாகப் பயன்படுகின்றன.

பனை ஓலைகள் கூடைகள் முடையவும், கைவினைப் பொருட்கள் செய்யவும், கூரை வேயவும் பயன்படுகின்றன.

பனஞ்சாறு பதநீராகவும், கற்கண்டாகவும், கருப்பட்டியாகவும் பயன்தருகிறது.

மேலும், பனைமரம் புயலைத் தாங்கும் வலிமை பெற்றது.

பனைமரத்தின் வேர் நீரைத் தக்க வைத்துக் கொள்ளும் இயல்பு கொண்டது. இது நிலத்தடி நீர்மட்டம் உயரக் காரணமாக அமைகிறது.

பனங்காய் வண்டி, பனை ஓலைக் காற்றாடி, பனை ஓலை விசிறி, பொம்மைகள், ஆகியவற்றைச் செய்து பல்வேறு விளையாட்டுகளை விளையாடலாம்.

பறவைகளுக்கு வாழிடமாகவும் விளங்குகிறது.

6. **பனைமரத்தின் பன்னிரண்டு உறுப்புகள் யாவை?**

இது வேர், தூர்ப்பகுதி, நடுமரம், பத்தைமட்டை, உச்சிப்பகுதி, ஓலை, சில்லாட்டை, பாளைப்பீலி, பனங்காய், பச்சைமட்டை, சாரைஓலை, குருத்தோலை என்ற பன்னிரண்டு உறுப்புகளை உடைய மரம்.

7. **பனை ஓலை எதற்கெல்லாம் பயன்படுகிறது**

பனை ஓலைகள் கூடைகள் முடையவும், கைவினைப் பொருட்கள் செய்யவும், கூரை வேயவும் பயன்படுகின்றன.

8. **பனங்சாற்றின் பயன்கள் யாவை?**

பனஞ்சாறு பதநீராகவும், கற்கண்டாகவும், கருப்பட்டியாகவும் பயன் தருகிறது.

9. **ஓலைச்சுவடிகள் எதற்கு பயன்படுகிறது?**

நமது முன்னோர்கள் பற்றியும் பண்டைய இலக்கியங்கள் பற்றியும் தெரிந்து கொள்ள நமக்குப் பெரிதும் உதவியது.

10. **பனை மரத்தின் வேரின் பயன் யாது?**

பனைமரத்தின் வேர் நீரைத் தக்க வைத்துக் கொள்ளும் இயல்பு கொண்டது. இது நிலத்தடி நீர்மட்டம் உயரக் காரணமாக அமைகிறது.

11. **பனை மரங்கள் எதற்காக வெட்டப்படுகின்றன?**

தமிழ் சமூகத்தின் உயிர்சாட்சியாக விளங்கும் பனை மரங்கள் செங்கள் சூளைகளுக்கு எரிபொருளுக்காக வெட்டப்படுகின்றன.

12. **பனை மரத்தைச் சார்ந்து இருக்கும் பறவைகள் யாவை?**

பனை மரத்தைச் சார்ந்து இருக்கும் பறவைகள் பனங்காடை, பனை உழவரான் ஆகியவை ஆகும்.